[24th January 1961

Cottage Industry

*138 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) மாதர் நல இலாகா மூலமாக எந்தெந்த இடங்களில் ஹரிஜனப் பெண்களுக்கு சாயம் போடுதல், பாய் முடைதல், சட்டை செய்தல், பொம்மைகள் செய்தல் போன்ற கிராமத் தொழில்கள் செய்வதற்கான கைத்தொழில் நிலையங்கள் ஏற்படுத் தப்பட்டிருக்கின்றன ?

(இ) இந்நிலையங்களில் எத்தனை ஹரிஜனப் பெண்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ) & (இ) No cottage industry work centre has been started exclusively for Harijan Women. In the 23 work centres now run by the Women's Welfare Department, 22 Harijan women are now undergoing training.

Sri P. G. MANICKAM : ஸார், இந்தப் பள்ளிகளின் மூலமாக அரிஜனங்களுக்கோ அல்லது நான்-அரிஜனங்களுக்கோ உதவி செய்கின்ற முறையில் இப்படிப்பட்ட வேலைகளை துவக்குவதற்கு ஏதாவது தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அவ்விதம் ஏதாவது தொகை ஒதுக்கப்பட்டிருப்பின் அந்த வேலைகளை கண்காணிப்பு செய்ய ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸ் பற்றிய கேள்வி. கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கும் விவரங்களை கொடுக்க வேண்டுமானால் தனிக்கேள்வி போட வேண்டும்.

Home for women

* *Q.*—Sri P. G. MANICKAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வேலை செய்து பிழைக்கின்ற நிலையில் இல்லாத மாதர் களையும், குழந்தைகளையும் ஆதரித்துக் காப்பாற்றுவதற்கான நிலையம் ஒன்றை மாதர் நல இலாகா மூலமாக ஏற்படுத்த திட்ட மிடப்பட்டிருக்கிறதா?

(இ) அவ்வாறிருப்பின், இந்நிலையம் எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும்?

(உ) எத்தனை மாதர்களும் குழந்தைகளும் இந்நிலையத்தில் சேர்க்கப்படுவார்கள் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) & (*c*) The details are yet to be finalized.